# 25-06-2024 செய்தி

## வங்கதேசத்துடன் தண்ணீர் பங்கீடு ஒப்பந்தம்

- 1996 -ல் மேற்கொள்ளப்பட்ட கங்கை நதி நீர் பங்கீடு ஒப்பந்தத்தை புதுப்பிப்பது மற்றும் தீஸ்தா நதியை பாதுகாப்பது மற்றும் நிர்வகிப்பது தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.
- இந்தியா-வங்கதேசம் இடையிலான கங்கை நதி நீர் பங்கீட்டு ஒப்பந்தம் வரும் 2026-ல் முடிகிறது.
- இதை புதுப்பிக்க வங்கதேச பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.
- இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஆலோசனையை கேட்காமல் ஆலோசனை நடத்தி இருப்பது ஏற்கத்தக்கதல்ல.
- இந்த ஒப்பந்தத்தால் மேற்கு வங்க மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.
- ரயில் மற்றும் பேருந்து சேவை உட்பட பல்வேறு விவகாரங்களில் வங்கதேசத்துடன் மேற்கு வங்க அரசு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.
- ஆனால், தண்ணீர் என்பது மாநில மக்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினை. எனவே, இதில் சமரசம் செய்து கொள்ள முடியாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு 6 மாதம் விடுப்பு

- மத்திய சிவில் சர்வீஸ் (விடுப்பு) விதிகள் 1972 சட்டம் திருத்தப்பட்டு இந்த 6 மாத விடுப்பு விதி கொண்டு வரப்பட்டுள்ளது.
- இந்த சட்டத்தின்படி, வாடகைத்தாய் மூலம் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் தாய்க்கு 180 நாள்கள் (6 மாதங்கள்) மகப்பேறு விடுப்பும், குழந்தையின் தந்தைக்கு 15 நாட்கள் விடுப்பும் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையில், வாடகைத்தாய் மற்றும் அவர் மூலம் குழந்தையைப் பெறும் தாய், இருவரில் ஒருவர் அல்லது இருவருமே அரசு ஊழியர்களாக இருந்து, 2 குழந்தைகளுக்கும் குறைவாக இருப்பர்களுக்கு மகப்பேறு விடுப்பு 180 நாள்கள் வழங்கப்படும் என்றும் மத்திய அரசு பணியாளர் நலன் அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- வாடகைத்தாய் மூலம் குழந்தையைப் பெறும் தந்தை அரசு ஊழியராகவும், 2 குழந்தைகளுக்கு குறைவாகப் பெற்றவராகவும் இருந்தால், குழந்தை பிறந்த 6 மாத காலத்துக்குள் அவர் 15 நாட்கள் விடுப்பு எடுத்துக்கொள்ள புதிய விதிகளில் அனுமதி தரப்பட்டுள்ளது.
- அதுமட்டுமல்லாமல், வாடகை தாய் மூலம் குழந்தைப் பெற்றுக் கொள்ளும் தாய்க்கு 2 குழந்தைகளுக்குக் குறைவாக இருந்தால் குழந்தைகள் பராமரிப்பு விடுப்பு எடுக்க மத்திய சிவில் சர்வீஸ் (விடுப்பு) புதிய விதிகள் 2024-ன்படி அனுமதி வழங்கப்படுகிறது.
- தற்போதுள்ள விதிகளின்படி, பெண் அரசு ஊழியர் மற்றும் தனி பெற்றோராக இருக்கும் ஆண் அரசு ஊழியருக்கு குழந்தைகள் பராமரிப்பு விடுப்பாக, இரண்டு குழந்தைகளின் கல்வி, உடல்நலம் மற்றும் இதரத் தேவைகளுக்கு என அவர்களுடைய மொத்தப் பணிக் காலத்தில் 730 நாள்கள் விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

## பாலினச் சமத்துவத்துக்காக 134 ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா?

- உலக பெருளாதார மன்றம் சார்பில் வெளியிடப்பட்ட உலகளாவிய பாலின இடைவெளி குறித்த ஆய்வறிக்கையில், கடந்த ஆண்டைவிட இரண்டு புள்ளிகள் சரிந்து, 129 ஆவது இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது.
- ஆய்வுக்கு உள்படுத்தப்பட்ட 146 நாடுகளில், கடைசி 20 இடங்களுக்குள் இந்தியா இருப்பது வருத்தமளிக்கிறது.
- உலக சராசரியோடு (68.5%) ஒப்பிடுகையில் பாலின இடைவெளியைப் பூர்த்திசெய்ய இந்தியா (64.1%) கடக்க வேண்டிய தொலைவு அதிகம்.

**134 ஆண்டுகள்**

1. பொருளாதாரப் பங்களிப்பு
2. வாய்ப்புகள் வழங்கப்படுவது

3. கல்வி, ஆரோக்கியம்

4. அரசியல் அதிகாரம் ஆகிய நான்கு முக்கியப் புள்ளிகளை மையமாக வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

- கடந்த ஓராண்டில் உலகம் முழுவதுமே 0.1% உயர்வைத்தான் நாம் அடைந்திருக்கிறோம்.
- இதே ரீதியில் நாம் பயணித்தால், பெண்ணும் ஆணும் சமத்துவ நிலையை அடைய இன்னும் 134 ஆண்டுகள் நாம் காத்திருக்க வேண்டும்.
- கல்வி, அரசியல் பங்களிப்பு போன்றவற்றில் இந்தியா ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டிருந்தபோதும் ஒட்டுமொத்தப் பாலின இடைவெளியில் நாம் பின்னடைவைச் சந்திக்கவும் இவற்றின் போதாமையே காரணம்.
- கல்வியறிவில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான 17.2% இடைவெளியோடு 124-ஆவது இடத்தில் இந்தியா இருக்கிறது.
- அதேபோல் மாநிலத் தலைமையில் இந்தியா முதல் 10 நாடுகளுக்குள் இடம்பிடித்திருக்கிறது. ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இடம் வகிப்பது, அமைச்சரவை, சட்டமன்றம்- நாடாளுமன்றங்களில் அங்கம் வகிப்பது போன்றவற்றில் பெண்களுக்கு வாய்ப்பளிக்காமல் இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது.
- அண்மையில் நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கைச் சரிவே இதற்குச் சாட்சி, 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் (78) இந்த ஆண்டு 74 பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- பொருளாதாரப் பங்களிப்பு - வாய்ப்பு பகிர்வு ஆகியவற்றில் இந்தியா ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுவருகிறது. இதில் நாம் கவனம் செலுத்துவதன் மூலம் பாலின இடைவெளியை ஓரளவுக்கு விரைவாகக் கடக்க முடியும்.

**உழைப்புச் சந்தையில் பெண்கள்**

- உழைப்புச் சந்தையில் பெண்களின் பங்களிப்பு 45.9% ஆக இருக்கிறது. இதை உயர்த்துவதில் ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.
- பெண்களுக்கு உயர் கல்வியை உறுதிசெய்வது, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவது, உகந்த பணிச்சூழலை உருவாக்குவது (போதுமான எண்ணிக்கையில் சுகாதாரமான கழிப்பறை, மாதவிடாய் விடுப்பு, பணியிடப் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் வகையிலான உள்ளகப் புகார்க்குழு, சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்டவை),
- திருமணத்துக்குப் பிறகும் பெண்கள் பணிபுரிவதற்குச் சாதகமான சூழலை உருவாக்குவது (ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு, வேலைநேரத்தில் நெகிழ்வு உள்ளிட்டவை), வீட்டுவேலைகளில் ஆண்களும் பங்கெடுப்பது போன்றவற்றைச் செயல்படுத்துவதால் உழைப்புச் சந்தையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கலாம்.

## உலக கைவினை நகரமாக அங்கீகாரம் பெற்றது ஸ்ரீநகர்

- இந்த மதிப்புமிக்க அங்கீகாரம் ஸ்ரீநகரின் பாரம்பரியம், கலைத்திறன் மற்றும் கைவினைக் கலைஞர்களின் அர்ப்பணப்பை மேலும் மேம்படுத்தும்.
- இதனால், கைத்தறி மற்றும் கைவினைத் துறைகள் மேம்படுவதுடன் அப்பகுதியில் சுற்றுலா மற்றும் உள்கட்டமைப்பும் மேம்படும்.
- உள்ளூர் கைவினைக் கலைஞர்களுக்கு சர்வதேச சந்தைகளில் வணிகம் செய்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும்.

## மாநிலப் பெயரை கேரளம் என மாற்ற சட்டப்பேரவையில் தீர்மானம்

- கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என அதிகார பூர்வமாக மாற்ற மத்திய அரசை வலியுறுத்தி அந்த மாநில சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- மலையாளம் பேசும் சமூகங்களை ஒன்றிணைத்த 'கேரளம்' உருவாக வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரப் போராட்ட காலத்திலே எழுந்தவை.
- மலையாளத்தில் கேரளம் என அழைக்கப்படும் மாநிலத்தை அரசமைப்பு சட்டத்தின் முதல் அட்டவணையில் 'கேரளா' என எழுதப்பட்டுள்ளது.
- இந்திய அரசமைப்பு சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் மாநிலத்தின் பெயரை கேரளம் என மத்திய அரசு திருத்தம் செய்ய வேண்டும்.
- மேலும், அரசமைப்பு சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இந்திய மொழிகளிலும் கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என மாற்ற வேண்டும் என்றார்.